

சேலம் மத்திய மாவட்டம். அன்னதானப்பட்டி பகுதி, காந்திநகர், மணியனூரில் தலைவர் கலைஞரின் 102வது பிறந்ததினத்தையொட்டி மின்னொளியில் கபாடி போட்டி நடைபெற்றது. போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் பரிசு கோப்பையை வழங்கினார். உடன் சேலம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சிவராஜ், கோட்டை பகுதி பொறுப்பாளர் இப்ராகீம், முகேஷ் ஆகியோர் இருந்தனர்.



நீலகிரி மாவட்டம் உதகை சட்டமன்ற தொகுதி உதகை நகராட்சிக்கு உட்பட்ட, 1,2,7,8 ஆகிய வார்டுகளுக்கான ”உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமானது உதகை ஒக்கலிகர் மண்டபத்தில் நடைபெற்றது. இதனை, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுடன் உங்களுடன் ஸ்டாலின் முகாமின் சிறப்பம்சம் பற்றி கலந்துரையாடினார். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் இளங்கோவன், உதகை நகர செயலாளர்கள் ஜார்ஜ், ரமேஷ், உதகை நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி, குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார், பொதுக்குழு உறுப்பினர் மோகன்குமார், மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் ரீட்டா, நாகமணி, விசாலாட்சி, விஷ்ணு பிரபு, விஜயகுமார், ரவி, குரூஸ் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில்

# இராயபுரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்தல்!

## மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, ஆக.7-

சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-



நம் உணர்வோடு கலந்த கலைஞர் அவர்களின் 7-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (07.08.2025 - வியாழன் கிழமை) காலை 6.30 மணியளவில் சென்னை வடக்கு மாவட்ட திமுக சார்பில் எனது (மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ) தலைமையில் இராயபுரம், எம்.சி. ரோடில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவிருக்கிறது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் - அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் - வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜெ.நடராஜன் தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்:

# ஆலந்தூர் தெற்கு பகுதி 167வது வட்டத்தில் காலை சிற்றுண்டி!

## பகுதி செயலாளர் என்.சந்திரன் எம்.சி. வழங்குகிறார்!

சென்னை, ஆக.7

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாவது நினைவு நாளை முன்னிட்டு ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வட்டத்தில் வட்டச் செயலாளர் ஜெ. நடராஜன் தலைமையில் இன்று (7.8.2025) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு எம். ஜி.ஆர். ரோடு அண்ணா சிலை அருகே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தி காலை சிற்றுண்டியை மண்டல குழு தலைவர் பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி வழங்குகிறார்.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகி கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதிவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர்,பாக முகவர்கள்(BLA2), கழக தோழர்கள், கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொளளப்படுகிறது.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்: ஆ.ச.கவாஸ்கர் தலைமையில்

# 173 அ வட்டத்தில் 1000 பேருக்கு உணவு: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

## துரைகபிலன் – மா.தமிழரசு – ஆ.ச.ஸ்ரீகாந்த் – ஆர்.பாலசுந்தரம் பங்கேற்பு!

சென்னை, ஆக. 7 -

முத்தமிழறிஞர் - வரலாற்று நாயகர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி இன்று வட்ட துணைச் செயலாளர் ஆ.ச. கவாஸ்கர் தலைமையில், ஆ.ச. ஸ்ரீகாந்த் முன்னிலைடயில் நடைபெறும் நிகழச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உணவு வழங்குகிறார்.

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்குப் பகுதி 173 அ வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தி - 1000 நபர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி வட்டக் கழக துணைச் செயலாளர் ஆ.ச. கவாஸ்கர் தலையையில் இன்று (7.8.2025 - வியாழன்) பகல் 12 மணிக்கு இந்திராநகர் கார்ப்பரேஷன் காம்ப்ளக்ஸ் அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர் துரைகபிலன், வட்டச் செயலாளர் மா.தமிழரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று (07-08-2025) வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் 1000 நபர்களுக்கு உணவு வழங்குகிறார். இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., கழக பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பாலசுந்தரம், பகுதி துணைச் செயலாளர் எஸ். சந்தானம், ஆனந்தன், சத்தியமூர்த்தி, சி.கருணாநிதி, ஜமால், சாந்தி, செல்வி சரவணன், பென்சிலைய்யா, சசிகுமார், அ.அபுதாலிப்., சி. ரவிக்குமார், ராஜேந்திரன், ஷேக்தாவூத் உள்ளிட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், முன்னணியினர், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றன.



தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் – முடிச்சூர் ஊராட்சியில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா ரூ.1 கோடியே 43 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய துணை செயலாளர், முடிச்சூர் ஊராட்சி மன்ற துணை தலைவர் அ.விநாயகமூர்த்தி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுனில் மேத்யு, கிளை கழக செயலாளர் பி.எஸ்.ரமேஷ், ஊராட்சி மன்ற உறுப்பினர் சாந்தி ரமேஷ், கிளை கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

